தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387 உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR www.anandabhaskar.com






சென்னை மலர்: 01 இதழ்: 155 30.11.2025 ஞாயிற்றுக்கிழமை ››Chennai ››Volume: 01 ››Issue: 155 ›› Sunday ››pages 4 ››Rs.5/-


## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(30-11-2025)
விசுவாவசு ஆண்டு, கார்த்திகை-14
பிறை: வளர்பிறை
திதி
தசமி மாலை 4.28 வரை
பிறகு ஏகாதசி.
நட்சத்திரம்:
உத்திரட்டாதி இரவு 9.08 வரை
பிறகு ரேவதி
யோகம்
அமிர்தயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி.
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி.
சூலம் -மேற்கு
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி

| | |
|---|---|
| மேஷம் | உதவி |
| ரிஷபம் | சுகம் |
| மிதுனம் | ஆக்கம் |
| கடகம் | நற்செயல் |
| சிம்மம் | ஆர்வம் |
| கன்னி | நன்மை |
| துலாம் | பாராட்டு |
| விருச்சிகம் | சிந்தனை |
| தனுசு | சிறப்பு |
| மகரம் | அமைதி |
| கும்பம் | பாசம் |
| மீனம் | தேர்ச்சி |

# டிட்வா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்



சென்னை,நவ.30:


அனைத்து மாவட்டங்களிலும் 6 ஆயிரத்திற்கும் அதிகமான நிவாரண முகங்கள் தயார் நிலையில் உள்ளதாக அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களுடன் பேசிய அவர், "டிட்வா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கனமழை பெய்யவுள்ள மாவட்டங்களின் ஆட்சியர்களுடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளோம்.

நாகையில் தோப்புத்துறை, நாலு வேதபதி ஆகிய 2 இடங்களில் அதிகமாக மழை பெய்துள்ளது.

இந்த புயலானது ராமநாதபுரத்தில் இருந்து கடற்கரையையொட்டியே நகர்ந்து வருகிறது. சென்னை வரை வரும் என்று எதிர்ப்பார்க்கிறோம். ஆனால் சென்னைக்குள் வருகிறதா அல்லது வெளியே போகிறதா என்பதை வானிலை ஆய்வு மையம் இன்னும் தெளிவாகச் சொல்லவில்லை.

சென்னைக்குள் வராமல் சென்னைக்கு வெளியே கடற்கரையையொட்டியே செல்லும் என இன்று கூறியிருக்கிறார்கள். முதல்வர் இதுகுறித்து தொடர்ந்து ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்.




முகாம்கள், மக்களுக்குத் தேவையான பொருள்கள், 28 பேரிடர் மீட்புக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும் 10 குழுக்கள் பிற மாநிலங்களில் இருந்து விமானம் மூலம் வரவைக்க இருக்கிறோம்.பாதிப்பை பொருத்து தேவையான மாவட்டங்களுக்கு கூடுதல் மீட்புக் குழுக்களை அனுப்புவோம். விமானப்படை, கடலோர காவல் படையும் தயாராக இருக்கிறார்கள்.

எந்தவொரு பாதிப்பும் இல்லாதவண்ணம் இந்த புயலை அரசு சமாளிக்கும்" என்று கூறினார்.

இதுவரை போக்குவரத்து பாதிப்பு, உயிரிழப்பு இல்லை. 16 கால்நடைகள் மரணமடைந்துள்ளன. 24 குடிசைகள் சேதம் அடைந்துள்ளன. அனைத்து மாவட்டத்திலும் 6 ஆயிரத்திற்கும் அதிகமான நிவாரண முகங்கள் தயார் நிலையில் உள்ளன.

இன்றும் நாளையும் கடற்கரையோரம் யாரும் செல்ல வேண்டாம். 1.24 கோடி பேருக்கு புயல் முன்னெச்சரிக்கை குறித்த குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது" என்றார்.

தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதையொட்டிய இலங்கை கடலோரப் பகுதிகளில் நிலவிய 'டிட்வா' புயல் தமிழகத்தை நெருங்கி வருகிறது. தற்போது வேதாரண்யத்திற்கு 140 கிமீ தொலைவில் உள்ள புயல், தமிழக கடற்கரையை ஒட்டி வரும் என்று கணிக்கப்பட்டுள்ளதால் தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள்ளது.

இதுபற்றி சென்னை வானிலை ஆய்வு மையம் இன்று வெளியிட்டுள்ள தகவலில் கூறப்பட்டுள்ளதாவது:

திருவள்ளூர்ராணிப்பேட்டை மாவட்டங்களுக்கு அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், தருமபுரி மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கையும்சேலம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்களுக்கும் மற்றும் புதுச்சேரிக்கு கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

டிச.1ஆம்தேதி(திங்கள்கிழமை) திருவள்ளூர் மாவட்டத்திற்கு மட்டும் கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் புயலால் கடலில் காற்று வீசும் என்பதால் கடலோர மாவட்டங்களுக்கு கடல் சீற்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

## கனமழை, நிலச்சரிவால் தத்தளிக்கும் இலங்கை: பலி 123-ஆக உயர்வு



இலங்கையில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வந்த நிலையில் அந்நாட்டின் கடல்பகுதியில் உருவான டிட்வா புயல் காரணமாக பலத்த மழை கொட்டியது. தொடர்ந்து பெய்த கனமழையால் ஆறுகள், நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிந்து பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. மேலும் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. தலைநகர் கொழும்பு உள்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்றுவருகிறது. இதற்கிடையே வெள்ளம்-நிலச்சரிவுகளில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 123-ஆக உயர்ந்து உள்ளது. மொத்தமுள்ள 25 நிர்வாக மாவட்டங்களில் 17 மாவட்டங்கள் கடும் பாதிப்பை அடைந்துள்ளன. இதில் அதிகபட்சமாக கண்டி மாவட்டத்தில் 51 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் மாயமான 130-க்கும் மேற்பட்டோரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. 488 நிவாரண மையங்களில் 43,925 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இந்திய பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்தார். மேலும் இலங்கைக்கு இந்தியா உதவிகளை அளிக்கும் என்று தெரிவித்தார். இதையடுத்து ஆபரேசன் சாகர் பந்து திட்டத்தின் கீழ், பேரிடர்கால உதவிகள் மற்றும் நிவாரணப் பொருட்களை இந்தியா அவசரமாக அனுப்பியது.

## ஒரே நாளில் 10 வீடுகளில் 'பலே' திருட்டு: 3 பேரை போலீசார் சுட்டுப்பிடிப்பு

கோவை,நவ.30:

கோவையில் 10க்கும் மேற்பட்ட வீடுகளில் கொள்ளையடித்து விட்டு, தப்பியோடிய 3 பேரை போலீசார் சுட்டுப்பிடித்தனர்.


கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் 10க்கும் மேற்பட்ட வீடுகளில் நகைகள், பணம் உள்ளிட்டவை திருடு போனது.

இது குறித்து போலீசாரிடம் புகார் அளிக்கப்பட்டது. குடியிருப்பு வளாகத்தில் இருந்த சிசிடிவி காட்சிகள் அடிப்படையில் போலீசார் கொள்ளையர்களை வலைவீசி தேடினர்.பின்னர் குளத்துபாளையம் பகுதியில், கொள்ளையர்கள் ஆசிப்(48), இர்பான்(45), கல்லு எ கலீல்(60) ஆகிய 3 பேரை போலீசார் துப்பாக்கியால் சுட்டுப்பிடித்தனர். இவர்கள் உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்தவர்கள் என்பது போலீசார் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது.

தற்போது அவர்கள் சிகிச்சை சக்காகமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். அவர்களிடம் இருந்து திருடிய 56 சவரன் நகை மற்றும் ரூ.3 லட்சம் பணத்தை போலீசார் மீட்டனர்.

அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## குட்ட குட்ட குனிய மாட்டோம்... நிமிர்ந்து நடைபோடுவோம்!



சென்னை,நவ.30:

தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டே, தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பது சரியா?

தமிழ்நாட்டின் கோரிக்கைகளை - தேவைகளைக் கடிதங்களாக, நேரில் மனுக்களாக, சட்டமன்றத் தீர்மானங்களாக எடுத்துச் சொல்லியும் காதில் வாங்காமல் இருப்பது நியாயமல்ல!

அதிகமான வரி வருவாயைத் தரும் மாநிலமான தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்வதை மனச்சாட்சியுள்ள யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். உங்கள் வஞ்சனைகளைக் கடந்துதான் நாட்டிலேயே அதிகமான 11.19% பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கிறோம். குட்ட குட்ட குனிய மாட்டோம்; நிமிர்ந்து நடைபோடுவோம்!

வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும்!

# சித்தராமையா வீட்டில் சிவக்குமார் ஆலோசனை

பெங்களூரு,நவ.30:

முதல்வர் பதவி குறித்து மோதல் எழுந்துள்ள நிலையில், காங்கிரஸ் மேலிடத்தின் உத்தரவுப்படி, கர்நாடக முதல்வர் சித்தராமையா அளித்த காலை உணவு விருந்தில் துணை முதல்வர் சிவக்குமார் பங்கேற்றார்.

கர்நாடக காங்கிரஸ் ஆட்சியில் முதல்வர் பதவியை தக்கவைப்பதில் முதல்வர் சித்தராமையா மும்முரமாக உள்ளார். இந்த ஆட்சி முடியும் வரை தானே முதல்வராக இருப்பேன் என்றும் சொல்லி வருகிறார். ஆனால், ஆட்சி அமைய தன் உழைப்பு மிக பெரியது, ஆட்சி அமையும்போது போடப்பட்ட வாய்மொழி ஒப்பந்தப்படி, தனக்கு முதல்வர் பதவியை விட்டுத் தர வேண்டும் என்று துணை முதல்வர் சிவகுமார் வலியுறுத்தி வருகிறார்.

தங்கள் கருத்தில் இருவரும்



அடம் பிடித்து வருவது, கர்நாடக காங்கிரஸ் ஆட்சியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு தலைவர்களின் ஆதரவாளர்களும் சமூக வலைதளங்களில் வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றனர். கடந்த ஒரு மாதமாக அரசு இயந்திரம் முடங்கிக் கிடப்பதாக பொது மக்கள் எரிச்சல் அடைந்துள்ளனர்.

எந்த விதமான மேம்பாட்டுப் பணிகளும் நடக்கவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றனர். இதற்கிடையில், முதல்வராக சித்தராமையா தொடரவில்லை என்றால், காங்கிரசுக்கு எதிராக செயல்படுவோம் என்று அவர் சார்ந்த குரும்பர் சமுதாயத்தினர் ஆலோசனை நடத்தி தீர்மானித்தனர். மூத்த தலைவர்களே சண்டை போடுவது ஆட்சிக்கும், கட்சிக்கும் மட்டுமின்றி தொண்டர்களும் வேதனையில் உள்ளனர்.

இந்நிலையில் இன்று (நவ.,29) காங்கிரஸ் மேலிடத்தின் உத்தரவுப்படி, கர்நாடக முதல்வர் சித்தராமையா அளித்த காலை உணவு விருந்தில் துணை முதல்வர் சிவக்குமார் பங்கேற்றார். இருவரும் பேசிக்கொண்ட விவரம் இன்னும் வெளியாகவில்லை. இது பற்றி காங்கிரஸ் மேலிடம் இறுதி முடிவை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதல்வர், துணை முதல்வர் இடையே மோதல் போக்கு நீடித்தால், டிசம்பர் 8ம் தேதி துவங்கும் குளிர்கால சட்டசபை கூட்டத்தொடரில், அமளியில் ஈடுபட்டு போராட்டம் நடத்த எதிர்க்கட்சியினர் திட்டமிட்டு இருக்கின்றனர்.

## எஸ்ஐஆர்: வாக்காளர் பட்டியலில் 30 லட்சம் பெயர்கள் நீக்கம்!

புதுடில்லி,நவ.30:

மேற்கு வங்கத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) மூலம் வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் 30 லட்சம் பெயர்கள் நீக்கப்படும் என இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வருகின்றன. இதில், மேற்கு வங்க மாநிலத்தின் வாக்காளர் பட்டியல்களில் இருந்து சுமார் 30 லட்சம் பெயர்கள் நீக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, நீக்கப்படவுள்ள 30 லட்சம் வாக்காளர்களில் சுமார் 16 லட்சம் வாக்காளர்கள் ஏற்கெனவே மரணமடைந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இத்துடன், போலியான வாக்காளர்கள், பிற மாநிலங்களுக்கு நிரந்தரமாகக் குடியேறியவர்கள் மற்றும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத வாக்காளர்களின் பெயர்களும் பட்டியலில் இருந்து நீக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இதுவரை பூர்த்தி செய்யப்பட்டு டிஜிட்டல் மயமாக்கப்பட்ட படிவங்களின் சதவிகிதத்தின் அடிப்படையில் மட்டுமே இந்த எண்ணிக்கையானது கூறப்படுவதாகவும், இந்தப் பணிகள் முழுவதுமாக நிறைவடைந்தவுடன் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் மேற்கு வங்கத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.


ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS

| | |
|---|---|
| Public Notice | Loss of Share |
| Legal Notice | Merger |
| Tender Notice | Acquisition |
| Society Notice | AFR, UFR, etc. |

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009 Email: anandabhaskarnews@gmail.com




## அருள்மிகு அண்ணாமலையார் திருக்கார்த்திகை தீபத் திருவிழா 5-ஆம் நாள் இரவு உற்சவம்



**திருவண்ணாமலை, நவ.30:** திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா பஞ்சபூத நாயகனுக்கு ஐந்தாம் நாள் விழா விநாயகர் வெள்ளி மூஷிக வாகனத்திலும், முருகர் வெள்ளி மயில் வாகனத்திலும், அண்ணாமலையார் உண்ணாமலையம்மன் வெள்ளி பெரிய ரிஷப வாகனத்திலும், உண்ணாமலை அம்மன் வெள்ளி ரிஷப வாகனத்திலும், சண்டிகேஸ்வரர் சிறிய வெள்ளி ரிஷப வாகனத்திலும் மாட வீதி உலா பவனி நடைபெற்றது. வெள்ளி ரிஷப வாகனத்தில் மின்விளக்குகளால் அலங்கரித்து மாட வீதி உலா நடைபெற்றது. மாட வீதி உலாவில் சிவதாண்டவ மேல தாளங்கள், நாதஸ்வரம் இசை கலைஞர்கள் வேத மந்திரங்கள் ஒலிக்க, சிவன் பக்தர்கள் பாட்டுக்கள் பாடி, வெகு சிறப்பாக மாட வீதி உலா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாட வீதி உலாவிலும் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**


## இளையான்குடி சிவாலயத்தில் திருமுறை முற்றோதல்



**சிவகங்கை, நவ.30 :** சிவகங்கை மாவட்டம் இளையான்குடி சிவகங்கை தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட ஸ்ரீஞானாம்பிகை சமேத ராஜேந்திர சோழிஸ்வரர் கோவிலில் இளையான்குடி எம்பி ரான் மாறநாயனார் திருக்கூட்டத்தின் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவில் சித்தாந்த சுடர்மணி எடப்பாடி சிவத்திரு மா. ஜானகிராமன் ஐயா எழுந்தருளி அருளுரை நிகழ்த்தினார்கள்.

பரமக்குடி, சாலைக்கிராமம், காளையார் கோயில், போகலூர், திருப்பாச்சேத்தி, ராமநாதபுரம், ஆகிய ஊர்களிலிருந்து ஏராளமான அடியார் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீமகாமாரியம்மன் அலங்காரத் தோற்றம்



மொடக்குறிச்சி ஒன்றியம் குளூர் ஊராட்சி ஆண்டக் கொத்தாம் பாளையம் ஸ்ரீமகாமாரியம்மன் 28.11.2025 வெள்ளிக்கிழமை அன்று கண்கவரும் அலங்காரத் தோற்றம். வாழ்க வளமுடன்.

## திருப்புவனத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் பொதுமக்களுக்கு போர்வைகள் வழங்கினார்



**சிவகங்கை, நவ.30:** சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மேற்கு ஒன்றிய திமுக மற்றும் பேரூர் கழக திமுக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் 48வது பிறந்த தினத்தை முன்னிட்டு 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கைமாறன் தலைமையில். பேரூர் கழகச் செயலாளர் நாகூர்கனி முன்னிலையில் குளிர்காலத்தை முன்னிட்டு முதியோர் களுக்கு போர்வைகள் மாவட்ட கழக துணைச் செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் வழங்கினார்.மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை நகர் இளைஞர் அணி அமைப்பாளர் கண்ணன். ஒன்றிய இளைஞரனி அமைப்பாளர் அறிவுகரசு. ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள். காளிதாஸ். கணேஷ் பிரபு .திருப்பதி. முத்துக்குமார். வேல்முருகன். பிரசாத். எஸ.ஏ.காளிதாஸ். கணேசன். செய்திருந்தார்கள். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்.

பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். மாவட்ட பிரதிநிதிகள். ராமலிங்கம்.சுப்பையா. ஈஸ்வரன். பாலகிருஷ்ணன். திருநாவுக்கரசு. ஒன்றிய கழக நிர்வாகிகள். ரவி. மகேந்திரன். ராமு. இளங்கோவன். மீனாட்சி சுந்தரம். ராஜ்மோகன். கெங்குராமன். தொண்டரணி ராஜா. மீனவரனி அண்ணாமலை. மாணவரனி அமைப்பாளர்கள். பாண்டியர்கிருஷ்ணன். கிஷோர். கவுன்சிலர்கள். மாரிதாஸ். வேல்பாண்டி. சித்ராதேவி ஆறுமுகம். பத்மாவதி முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள். பழையனூரில் ஒன்றிய செயலாளர் சுப்பிரமணிய தலைமையில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு போர்வைகளை இனிப்புகள் வழங்கப்பட்டன.

## திரு கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு 6-ஆம் நாள் காலை உற்சவ விழா



**திருவண்ணாமலை, நவ.30:** திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயிலில் 'அருள்மிகு அண்ணாமலையார் திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு 6-ஆம் நாள் காலை 63 நாயன்மார்களுடன், விநாயகர் மற்றும் ஸ்ரீ சந்திரசேகரர் யானை வாகனத்தில் மாட வீதி உலா பவனி நடைபெற்றது. 63 நாயன்மார்களை பள்ளி மாணவர்கள் எடுத்துக்கொண்டு மாட வீதி உலாவில் வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, மேல தாளங்கள் இசைக்க மாட வீதி உலா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாட வீதி உலாவில் அரோகரா அரோகரா என்று முழுக்கமிட்டு சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 5-ம் ஆண்டு புத்தகத் திருவிழா





திருப்பத்தூர் மாவட்டத்தில் 5-ம் ஆண்டு புத்தகத் திருவிழா மாவட்ட ஆட்சியர் சிவ சௌந்திரவல்லி தலைமையில் நடைபெற்று வருகிறது இதனை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் மாண்புமிகு எ.வ.வேலு கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார் இந்நிகழ்வில் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தமுஎகச ஓய்வூதியர் கிளை மதுரை மாநகர் சார்பில் பாராட்டு விழா மற்றும் கருத்தரங்கம்




**மதுரை, நவ.30:** தமுஎகச ஓய்வூதியர் கிளை தலைவர் வெ.சங்கரலிங்கம் தலைமையில் 29.11.25 காலை நடைபெற்றது. கிளைச்செயலாளர் முனைவர் சு கிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.ஜீவமணி பாடல்கள் பாடினார்.

வாசிப்பை நேசிப்போம் இலவச நூலக பொறுப்பாளர் அ.முகமது இப்றாகீம் மற்றும் தெய்வத்தாய் மாதரி குறுங்காப்பிய அந்தாதி நூலாசிரியர் அ.முத்துவேலன் ஆகியோரை அவர்களது சமூக பணி மற்றும் தமிழ் வளர்ச்சிப்பணிக்காக தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மதுரை மாவட்ட தலைவர் மு.பரமேஸ்வரன் பாராட்டி கௌரவித்தார்.

மேலும் எதிர்கொள்வோம் எஸ்ஐஆர் ஐ என்ற தலைப்பில் எஸ்.முத்துராமலிங்கம், தொழிலாளர் நலச்சட்ட திருத்தங்களும் ஓய்வூதியர்களும் என்ற தலைப்பில் கோவிந்தராஜ் அவர்களும் கருத்துரையாற்றினர். அடைக்கன், மதுரைசுகி, பாலமுருகன் , மதுரை மணி ஆகியோர் கவிதை வாசித்தனர். தமுஎகச வின் மாவட்ட செயலாளர் பூ.பாண்டிய முத்துக்குமரன் மற்றும் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் அ.பால்முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வாசிப்பை நேசிப்போம் இலவச நூலக பொறுப்பாளர் அ.முகமது இப்றாகிம் ஏற்புரை வழங்கினார்.

கிளை பொருளாளர் ஜி.உதயகுமார் நன்றி கூறினார்.இக்கூட்டத்தில் மாநிலக்குழு உறுப்பினர் அ.நா.சாந்தாராம் உள்ளிட்ட 26 பேர் கலந்து கொண்டனர். வெ.சங்கரலிங்கம் கிளை தலைவர் முனைவர் சு கிருஷ்ணன் கிளை செயலாளர் தமுஎகச ஓய்வூதியர் கிளை.

## ராமனுத்து அரசு ஆரம்பப்பள்ளி தலைமையாசியருக்கு நன்னெறி ஆசிரியர் விருது வழங்கி கௌரவிப்பு




**எட்டையபுரம், நவ.30:** மதுரை இலக்கிய மன்றம் தேனி நாடார் சரஸ்வதி கல்வி நிறுவனங்கள் மற்றும் மதுரை அருணாச்சலா கல்வி அறக்கட்டளை இணைந்து ஒவ்வொரு ஆண்டும் கல்விப்பணியில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு நன்னெறி ஆசிரியர் விருதும் தேசிய மாணவர் படை பயிற்றுநர்களுக்கு வீரமாராயர் விருதும் வழங்கி கௌரவிக்கிறது.

இந்தாண்டு இவ்விழா தேனி நாடார் சரஸ்வதி பெண்கள் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. தமிழகம் மட்டுமல்லாது பிற மாநிலங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

இந்தாண்டிற்கான நன்னெறி ஆசிரியர் விருதினை எட்டையபுரம் அருகே உள்ள இராமனுத்து அரசு ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர் மு.க.இப்ராஹிம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

விருதினை தேனி மாவட்ட கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் கலை கதிரவன் மதுரை முதன்மை வருமான வரித்துறை ஆனையாளர் வசந்தன் வழங்கினர்.

இலக்கிய மன்ற நிருவுனர் அவுனிமாடசாமி அருணாச்சலா கல்வி அறக்கட்டளை தலைவர் அருணாசலம் இலக்கிய மன்ற செயலாளர் சூரஜ் சுந்தர சங்கர் ஆகியோர் விழாவினை ஒருங்கிணைத்தனர்.

## வாசிப்பை மேம்படுத்துவோம் திட்டம்




**ஈரோடு, நவ.30:** வாசிப்பை மேம்படுத்து வோம் திட்டத்தின் மூலம் ஈரோடு மாவட்டம் பள்ளிக் கல்வித்துறை சார்பில் மொடக்குறிச்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டுவிழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.

மாவட்ட ஆட்சியர் திரு ச.கந்தசாமி ஐஏஎஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மாவட்ட கல்வி அலுவலர், வட்டாரத் கல்வி அலுவலர், நூற்றுக்கும் மேற்பட்ட அரசுப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மொடக்குறிச்சி வட்டாரத்திலுள்ள நூலகர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசும் போது, இந்த வட்டாரத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் வாசிப்பை மேம்படுத்துவோம் திட்டத்தினை முழுமையாக செயல்படுத்தி, அனைத்து மாணவ மாணவியரையும் பொது நூலகங்களில் உறுப்பினர்களாக சேர்த்தமைக்கும் அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும் நன்றி! அரசுப் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ மாணவியருக்கும் இன்னும் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்தி அவர்கள் படிப்பிலும் தேர்ச்சிகளிலும் முதல் நிலை அடைய ஆசிரியப் பெருமக்கள் பாடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார் தங்களது பகுதி நேர நூலகத்தில் ரூ1000- செலுத்தி புரவலராக சேர்ந்து கொண்ட ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு செங்கரைப்பாளையம் பகுதி நேர நூலகர் திரு எஸ்.கிருஷ்ணன் அவர்கள் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்துக் கொண்டார். விழாவை ஆசிரியர்கள் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

நன்றி நவிலல், தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது. நன்றி! வணக்கம்!

## திட்டக்குடி அருகே நலவாரியத்தில் பதிவு செய்த கட்டுமான தொழிலாளர்களுக்கு அமைச்சர் சி.வெ.கணேசன் திறன் மேப்பாட்டுத் பயிற்சி கையேடுகள் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்




**திட்டக்குடி,நவ.30:** கடலூர் மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றியம் நகரம் போரூர் கழக திமுக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சரும் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளருமான சி.வெ.கணேசன் தலைமையில் கழுதூர் வெங்கடேஷ்வரா கல்லூரியில் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து பாசார் கழுதூர் வழியாக விருத்தாசலம் வரை செல்வதற்கு புதிய பேருந்து இயக்க வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் அமைச்சர் கணேசனிடம் கோரிக்கை விடுத்தனர். அதன் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி பழைய வழிதடத்தில் பாசார், கழுதூர் வழியாக விருத்தாச்சலம் வரை செல்லும் புதிய மகளிர் கட்டணமில்லா விடியல் பயண பேருந்து சேவையை அமைச்சர் சி.வெ. கணேசன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும் மங்களூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறை மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் நலவாரியம் மூலம் பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கு உபகரணங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கணேசன் வழங்கினார்.

தொடர்ந்து மங்களூரில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கான திறன் மேப்பாட்டுத் பயிற்சி கையேடுகளை அமைச்சர் வழங்கினார்.

மேலும் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, மங்களூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட ம.கொத்தனூர், லக்கூர்,வெங்கனூர்,டி. ஏந்தல் ஆகிய ஊராட்சிகளில் மக்கள் குறைதீர்ப்பு முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் சி.வெ.கணேசன் பங்கேற்று பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து நலத்திட்ட உதவிகளை வழங்கி பொதுமக்களுக்கிடையே பெரும் வரவேற்பை பெற்று அசத்தி வருகிறார்.

இதில் நலவாரிய உதவி ஆணையர் ராமு, தாசில்தார்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பெரியார் யூனியன் அமைப்புசாரா மற்றும் கட்டுமான தொழிலாளர்களின் சங்க பொதுச் செயலாளர் கோழியூர் புகழேந்தி மற்றும் திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் பேச்சாளர் வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் பட்டூர் அமிர்தலிங்கம்,செங்குட்டுவன், சின்னசாமி, திட்டக்குடி நகர செயலாளர் வி.பி.பி.பரமகுரு, பேரூர் செயலாளர்கள், முன்னாள் ஒன்றிய சேர்மன் சுகுணா, சிறுபான்மையினர் நலப்பிரிவு மாவட்டத் துணை அமைப்பாளர் அபூபக்கர், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சேவைக்குறைபாடு
# தனியார் இன்சூரன்ஸ் நிறுவனம் நுகர்வோருக்கு ரூ.10.60 லட்சம் வழங்க உத்தரவு




**தூத்துக்குடி, நவ.30:** தூத்துக்குடியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ரகுபதி ராஜா என்பவர் ஒரு தனியார் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் குடும்ப ஹெல்த் இன்சூரன்ஸ் பாலிசி எடுத்திருந்தார். இந்த பாலிசியில் அவரது குடும்பத்தினரையும் சேர்த்து காப்பீடு செய்துள்ளார். இவரது மனைவி சாந்தி ரகுபதி என்பவர் தங்களது குழந்தைகளை பார்ப்பதற்காக இங்கிலாந்து சென்றிருந்த போது வயிற்றில் வலி ஏற்பட்டுள்ளது. உடனடியாக சென்னை திரும்பி அங்குள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

அதன் பின்னர் இந்த பணத்தை தனியார் இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் காப்பீடு செய்ததன் அடிப்படையில் பணத்தை தருமாறு கேட்டுள்ளார். ஆனால் இன்சூரன்ஸ் நிறுவனம் ஏற்கனவே இருந்த நோயை மறைத்து பாலிசி எடுத்ததாக கூறி சிகிச்சைக்காக செலுத்தப்பட்ட பணத்தை தர மறுத்துள்ளது. இதைக் கண்ட புகார்தாரர் அதிர்ச்சியும், தாங்க முடியாத வேதனையும் அடைந்து உடனடியாக வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். ஆனால் இதன் பின்னரும் உரிய பதில் கிடைக்காததால் மன உளைச்சலுக்கு ஆளான நுகர்வோர், தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணைய தலைவர் சக்கரவர்த்தி, உறுப்பினர்கள் சங்கர், நமச்சிவாயம் ஆகியோர் சிகிச்சைக்காக செலுத்தப்பட்ட மருத்துவ செலவுத் தொகை ரூ.10 லட்சம், சேவை குறைபாடு மற்றும் மன உளைச்சலுக்கு நஷ்ட ஈடு தொகை ரூ.50,000 வழக்கு செலவுத் தொகை ரூ.10,000 ஆக மொத்தம் ரூ.10,60,000-ஐ 6 வார காலத்திற்குள் வழங்க வேண்டும் இல்லையென்றால் அந்த தொகையை செலுத்தும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 9 சதவீத வட்டியுடன் வழங்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

# அதிகாரியை சிக்கவைக்க பணத்தை மறைத்து வைத்த தீயணைப்பு வீரர் உட்பட 2 பேர் கைது

**திருநெல்வேலி, நவ.30:** திருநெல்வேலி மண்டல தீயணைப்பு துணை இயக்குனராக சரவணபாபு பணியாற்றி வருகிறார். இவரது அலுவலகத்தில் நவம்பர் 18ம் தேதி லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் சோதனை மேற்கொண்டனர். அவரது இருக்கைக்கு எதிரே உள்ள அலமாரியில் இருந்து ரூ.2 லட்சத்திற்கும் மேலான ரொக்க பணத்தை 6 கவர்களிலிருந்து எடுத்துச் சென்றனர்.

கணக்கில் காட்டாத பணம் என லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த சம்பவத்துக்கு முன்தினம், தீயணைப்பு துணை இயக்குனர் அலுவலகத்திற்கு எதிர் வீட்டில் உள்ள கேமரா காட்சிகளை ஆய்வு செய்தபோது 17ம் தேதி அதிகாலை 12:10 மணிக்கு கைகளில் கிளவுஸ், முகமூடி அணிந்து வந்த நபர் கவர்களில் பணத்தை கொண்டு வந்து அலுவலகத்தில் மறைத்து வைத்து செல்வது உறுதியானது.

இதுகுறித்து துணை இயக்குனர் சரவணபாபு நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணியிடம் புகார் தெரிவித்தார். அதன்பேரில் பெருமாள்புரம் போலீசார் விசாரித்தனர். அதில் பெரிய நெட்ஒர்க் இந்த சம்வத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. இதனையடுத்து தூத்துக்குடி தீயணைப்பு நிலையத்தில் பணியாற்றும் தீயணைப்பு வீரர் ஆனந்த் (வயது 30), அவரது அக்காள் மகன் முத்துசுடலை(29) ஆகியோர் கடந்த 25ம் தேதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.


இந்த திட்டத்தின் பின்னணியில் தீயணைப்பு துறை உயர்அதிகாரிகள், லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸ் அதிகாரிகளும் உள்ளனர். இந்த வழக்கை விசாரிக்கும் ஒரு அதிகாரி கூறுகையில், 2021ல் சரவணபாபு நாகர்கோவிலில் தீயணைப்பு அதிகாரியாக பணியாற்றும்போது, இரண்டு பெரிய நிறுவனங்கள் தீயணைப்பு துறையின் தடையில்லா சான்றினை போலியாக வைத்திருந்ததை கண்டுபிடித்தார்.

இதனையடுத்து தமிழகம் முழுவதும் இவ்வாறு போலியான தீயணைப்பு தடையின்மை சான்றிதழ்கள் வழங்கிய சென்னை தீயணைப்பு வீரர் கைது செய்யப்பட்டார். இந்த சம்பவத்திற்கு பிறகு துணை இயக்குனராக பதவி உயர்வு பெற்ற சரவணபாபுவிற்கு எதிராக, பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் ஒரு குழுவினராக சேர்ந்து கொண்டு அவரை பழிவாங்க திட்டமிட்டனர். இந்தக் குழுவில் தீயணைப்பு துறையின் தற்போதைய சென்னை உயரதிகாரி முதற்கொண்டு சாதாரண வீரர்கள் வரை உள்ளனர். இவர்களுடன் லஞ்ச ஒழிப்பு போலீசில் பணியாற்றும் சிலருக்கும் தொடர்பு உள்ளது.

சரவணபாபு அலுவலகத்தில் அதிகாலையில் பணத்தை வைத்து சென்ற நபர் இன்னும் கைதாகவில்லை. இதே உயர் அதிகாரிகளின் கும்பலால் மேலும் பல தீயணைப்பு அதிகாரிகள் லஞ்ச ஒழிப்பு போலீசாரால் போலியான புகார்களில் சிக்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த நெட்ஒர்க் முழுவதும் விசாரித்து அனைவரும் கைது செய்யப்படுவார்கள் என்று கூறினார்.




## ஊஞ்சல் உற்சவம்



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (28.11.2025) ஆங்கில மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை முன்னிட்டு காலை தாயாருக்கு திருமஞ்சனமும், மாலை 7 மணி அளவில் ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் பிரகார புறப்பாடு மற்றும் ஊஞ்சல் சேவை சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.
நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் ஊஞ்சல் சேவை குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

# தமிழகத்தில் நடப்பு ஆண்டில் 19 ஆயிரம் தீ விபத்துகள் பதிவு; அதிகாரிகள் தகவல்



**சென்னை, நவ.30:** தமிழகத்தில் நடப்பாண்டில் ஜனவரி முதல் அக்டோபர் மாதம் வரையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக 19 ஆயிரத்து 87 அழைப்புகள் தீயணைப்பு துறைக்கு வந்துள்ளன. தீ விபத்தில் சிக்கிய 101 பொதுமக்கள் மற்றும் 80 விலங்குகள் காப்பாற்றப்பட்டுள்ளன. மேலும், தீ விபத்தில் இருந்து ரூ.610 கோடியே 12 லட்சத்து 14 ஆயிரத்து 496 மதிப்பிலான சொத்துகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இதேபோல, அவசர காலங்களில் ஆபத்தான இடங்கள், விபத்துகள், இடிபாடுகளில் சிக்கிய மக்கள், செல்லப்பிராணிகள், கால்நடைகளை காப்பாற்றுவதற்காக 1 லட்சத்து 795 அழைப்புகள் தீயணைப்பு துறைக்கு வந்துள்ளன. இதில் 2 ஆயிரத்து 250 பொதுமக்கள் மற்றும் 61 ஆயிரத்து 174 விலங்குகள் மீட்கப்பட்டுள்ளதாக தீயணைப்பு துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில்நடப்பாண்டில் ஜனவரி முதல் அக்டோபர் மாதம் வரையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக 2 ஆயிரத்து 623 அழைப்புகள் தீயணைப்பு துறையினருக்கு வந்துள்ளது. இதில் சிக்கிய 25 பொதுமக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும், ரூ.48 கோடியே 66 லட்சத்து 43 ஆயிரத்து 204 மதிப்பிலான சொத்துகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இதேபோல, அவசர காலங்களில் ஆபத்தான இடங்களில் சிக்கிய மக்கள், விலங்குகளை மீட்க 13 ஆயிரத்து 936 அழைப்புகள் வந்துள்ளன. இதில் 525 பொதுமக்கள் மற்றும் 8 ஆயிரத்து 176 விலங்குகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு உள்ளன.

# இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சி: திருநெல்வேலி கலெக்டர் தகவல்




**திருநெல்வேலி, நவ.30:** மாவட்ட கலெக்டர் சுகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சித்துறையின் உதவியுடன் நமது மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (IOB) மூலம், கிராமப்புற சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் மகாராஜநகரில் செயல்பட்டு வருகிறது. திருநேல்வேலி மாவட்டத்தில் கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கத்துடன் தற்போது இப்பயிற்சி நிறுவனம் மூலம் இரு சக்கர வாகன பழுதுபார்ப்பு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் பழுதுபார்ப்பு தொடர்பான 30 நாட்கள் கொண்ட இலவச பயிற்சிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது.

இந்த பயிற்சியின்போது கூடுதலாக, சுயதொழில் துவங்குதல், பொருத்தமான வேலை வாய்ப்புகளை அடையாளம் காணுதல், வணிகத் திட்டம் தயாரித்தல், சந்தைப்படுத்துதல் மற்றும் தொழில் முனைவோருக்கான சிறந்த குணங்களை உருவாக்குதல் குறித்த பயிற்சியும் வழங்கப்படுகிறது. இந்த பயிற்சியின்போது பயிற்சி குறித்த செயல் விளக்க வீடியோக்கள், தொழில்துறை உபகரணங்களின் பயன்பாடு, கணினி வகுப்புகள் மற்றும் மென் திறன் பயிற்சி மற்றும் நடைமுறை வகுப்புகள் உள்ளிட்ட பல்வேறு பயிற்சி முறைகள் பின்பற்றப்படுவதுடன் தொடர்புடைய துறையில் நிபுணர்களாக இருக்கும் அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களால் பயிற்சி நடத்தப்படுகிறது.

இதுமட்டுமல்லாமல், பயிற்சியின் போது முக்கிய தொழில்துறை நிறுவனங்களுக்கு களப்பயணங்கள் அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களின் வெற்றிக்கதைகள் நேரடியாகச் சொல்லப்படுகின்றன. இளைஞர்களை குழுக்களாக அழைத்துச் சென்று சந்தை ஆராய்ச்சிக்காகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சியின் முடிவில், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பயிற்சியை முடித்த இளைஞர்கள் சுயதொழிலில் ஈடுபட உதவும் வகையில், பயிற்சி மைய அதிகாரிகளால் இரண்டு ஆண்டுகளுக்கு தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. பயிற்சியை முடித்த பிறகு இளைஞர்களுக்கு சுயதொழிலில் ஈடுபட கடன் உதவி தேவைப்பட்டால், வங்கிகளில் கடன் பெற பயற்சி மைய அதிகாரிகளால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த 24 மணி நேரத்தில் நாகை மாவட்டத்தில் அதிக மழை பதிவு

இந்த பயிற்சிகள் அனைத்தும் 100 சதவீதம் செய்முறைப்பயிற்சிகளாக இருக்கும். மேலும் பயிற்சி பங்கேற்பாளர்களுக்கு சீருடை, அடையாள அட்டை, தேநீர், காலை உணவு, மதிய உணவு மற்றும் பயிற்சிக்கு தேவையான அனைத்து உதவிகளும் இலவசமாக வழங்கப்படும். இந்த பயிற்சியில் 18 வயதிலிருந்து 45 வயது வரை உள்ள கிராமப்புற இளைஞர்கள் (ஆண், பெண் இருபாலரும்) கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் இந்த பயிற்சியில் கலந்து கொள்ள குறைந்தபட்ச கல்வித்தகுதியாக 8ம் வகுப்பு தேர்ச்சி போதுமானது.

ஆர்வமுள்ள இளைஞர்கள் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்குட்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மகாராஜநகர் கிளையின் முதல் தளத்தில் செயல்பட்டு வரும் கிராம சுய வேலைவாய்ப்பு பயிற்சி (A63, 5-வது குறுக்குத் தெரு, மகாராஜநகர், திருநெல்வேலி-627011.) மையத்தினை அணுகலாம். மேலும் இந்த பயிற்சிகள் குறித்த கூடுதல் விபரங்களுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சுயவேலை வாய்ப்பு பயிற்சி மையத்தினை 75399 38413, 75399 42413 ஆகிய தொலைபேசி எண்கள் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடியில் மின்சாரம் தாக்கி முதியவர் பலி

**தூத்துக்குடி, நவ.30:** தூத்துக்குடிபாளையங்கோட்டை ரோடு பக்திநாதபுரத்தைச்சேர்ந்த கந்தன் மகன் தனுஷ்கோடி (வயது 70). இவர் தனது வீடு முன்பு பெட்டி கடை நடத்தி வருகிறார். நேற்று மதியம் 3 மணி அளவில் தனது வீட்டில் மொட்டை மாடியில் கிடந்த கொசுவலையை எடுத்து ரோட்டில் வீசினாராம்.

அப்போது வீட்டின் முன்பு சென்று கொண்டிருந்த மின்சார வயரில் அவரது கை பட்டு அவரது உடலில் மின்சாரம் பாய்ந்தது. இதில் அவர் பரிதாபமாக இறந்தார். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த தென்பாகம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் திருமுருகன் சம்பவ இடத்திற்கு சென்று அவரது உடலை மீட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



## தினம் ஒரு குறள்

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறனொன்றோ ஆன்ற வொழுக்கு.** - குறள் 148

కామ దృష్టి యన్య కాంతలపై లేమి
పురుష లక్షణమ్ము పుణ్యమగును - కురళ్ 148

**पर-नारी नहिं ताकना, है धीरता महान ।**
**धर्म मात्र नहिं संत का, सदाचरण भी जान ॥** - कुराल 148

Piranmanai Nokkaadha Peraanmai Saandrorkku
Aranondro Aandra Vozhukku - Kural 148

# தூத்துக்குடியில் வாலிபருக்கு அரிவாள் வெட்டு: இளஞ்சிறார் கைது

## 5 பேருக்கு போலீஸ் வலைவீச்சு

**தூத்துக்குடி, நவ.30:** தூத்துக்குடி மாவட்டம், குரும்பூர் அருகேயுள்ள மேலகடம்பா, வடக்கு தெருவைச் சேர்ந்த ஜெயசீலன் மகன் எழில் மோகன் (வயது 24). பொறியியல் பட்டதாரியான இவர், கடந்த 25ம் தேதி அதே பகுதியைச் சேர்ந்த தனது நண்பரான ராஜன் மகன் பாலமுருகனுடன் பைக்கில் கல்லம்பாறை மதகில் குளிக்கச் சென்றார்.

மதகின் அருகிலுள்ள சாலையோரத்தில் குரும்பூர், நெட்டையன் காலனியைச்சேர்ந்த கணேசன் மகன் முத்துசூர்யா(22), முத்துகுமார் மகன் கோபி(23), கல்லாம்பாறையைச் சேர்ந்த இசக்கியப்பன் மகன்களான காளிராஜ்(33), பேச்சிராஜ்(31), குரூகாட்டூர், வடக்குத் தெருவைச் சேர்ந்த பால் மகன் சுபாஷ்கர் மற்றும் 17 வயது இளஞ்சிறார் ஆகியோர் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது எழில் மோகனின் வாகனம் வேகமாக சென்றபோது, சாலையில் தேங்கிக் கிடந்த மழை நீர் அவர்கள் மீது தெறித்தது. இதனால் ஆத்திரமடைந்த அவர்கள் எழில் மோகனை திட்டியுள்ளனர். எழில் மோகன் அவர்களிடம் மன்னிப்பு கேட்டுள்ளார்.

ஆனால் அவர்கள் அனைவரும் எழில் மோகனை தாக்கினர். அப்போது முத்து சூர்யா மறைத்து வைத்திருந்த வாளால் அவரின் தலையில் வெட்டிவிட்டு, அனைவரும் தப்பியோடிவிட்டனர். தகவலறிந்த எழில் மோகனின் சகோதரர்கள் சுகுமார், பிரியவதன், சந்தோஷ் முகிலன், பாலமுருகன் ஆகியோர் அவரை மீட்டு ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

இதுகுறித்த புகாரின்பேரில், குரும்பூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து, 26ம் தேதி 17 வயது இளஞ்சிறாரை கைது செய்து, தூத்துக்குடி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நெல்லையில் உள்ள சிறுவர் சீர்திருத்த பள்ளியில் அடைத்தனர். மேலும் தலைமறைவான 5 பேரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

# நெல்லையில் புகையிலை பொருட்கள் கடத்திய வாலிபர் கைது



**திருநெல்வேலி, நவ.30:** திருநெல்வேலி மாவட்டம், முன்னீர்பள்ளம் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பொன்னாங்குடி பாலம் அருகே முன்னீர்பள்ளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேல்ராஜ், உதவி ஆய்வாளர் வள்ளிநாயகம், எட்வின் அருண்ராஜ் மற்றும் காவலர்கள் நேற்று அதிகாலையில் தீவிர வாகன சோதனை மேற்கொண்டனர். அப்போது வேகமாக வந்த 2 நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது வாகனம் ஓட்டி வந்த கொங்கத்தான்பாறை அதிபன் பாலாஜி நகரை சேர்ந்த வெங்கடேஷ் (வயது 23) என்பவர் முன்னுக்குப் பின் முரணாக பேசியதால், வாகனத்தை சோதனை செய்தபோது தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பொருட்களான கணேஷ் புகையிலை, கூல் லிப், விமல் பான் மசாலா, v1 டோபாக்கோ ஆகியவை வெள்ளை மூட்டையில் இருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து அவரை முன்னீர்பள்ளம் காவல்துறையினர் கைது செய்து விசாரணை செய்தபோது, மேலும் 2 நான்கு சக்கர வாகனங்களில் தடை செய்யப்பட்ட பொருட்கள் இருந்தது தெரியவந்தது. தடை செய்யப்பட்ட பொருட்கள் சுமார் 500 கிலோ என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பெரிய மூட்டை 43, சிறிய மூட்டை 8 ஆகியவற்றில் மேற்சொன்ன பொருட்கள் இருந்தது.

மேலும் காவல்துறையின் விசாரணையில் மேலும் ஒருவர் தப்பி ஓடியது தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட வெங்கடேஷ் என்பவர் தற்போது சிறையில் அடைக்கப்பட்டார்.

# சோழர் கால வெள்ளி நாணயம் கண்டெடுப்பு




பண்ருட்டி அருகே தென்பெண்ணை ஆற்றில் சோழர் கால வெள்ளி நாணயம் கண்டெடுக்கப்பட்டது.

# கவிதை அரங்கம்!





உங்களுக்குள் முதலீடு
செய்யுங்கள் அதுவே
சிறந்த வட்டியை பெற்றுக்
கொடுக்கும்.

சிங்கம் சீரும் நாட்கள்
காத்துக்கொண்டு
இருக்கிறது... அமைதியாக
இல்லை .. கர்ஜனயுடன்
தீட்டி கொண்டிருக்கிறது...

உங்கள் வாழ்க்கையானது
உங்கள் எண்ணப்படியே
நிகழும் அதனால்
எண்ணத்தை எப்பொழுதும்
தூய்மையாக
வைத்திருங்கள்.

தோல்வியாளர் இலக்கை
அடையும் முன்னே விட்டு
விடுவான் ஆனால் ஒரு
வெற்றியாளர் வெற்றி
காணும் வரையில் தோற்று
கொண்டே இருப்பான்.

# மாலாவின் ராசி !



இனிப்பான செய்தி இரவு நேரத்தில். மனைவி மாலா சொன்னதைக்கேட்டு கட்டிலில்

சாய்ந்து அமர்ந்து கொண்டிருந்த சேகர் சந்தோஷப் பட படப்புடன் அவள் கை பற்றி

தன் அருகில் உட்கார வைத்தான். கன்னங்களில் செவ்வரிகள் ஓட நாணம் கலந்த

ஒரு வித குறு குறுப்புடன் தன் புருஷனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்

கொண்டிருந்தாள் மாலா.

" டியர், நமக்குக் கல்யாணமாகி ஒரு வருஷத்துக்குள் உனக்கு நாள் தள்ளிப் போயிருக்

குங்கறது சந்தோஷமான விஷயம்தான். இதை எங்கப்பா அம்மாக் கிட்டச் சொல்லிட்

டியா?"

" இல்லீங்க, முதல்ல உங்கக்கிட்டதான் சொல்றேன். நாளைக் காலைல அத்தைக்

கிட்டச் சொல்லலாம்னு இருக்கேன்..."

சட்டென கையமர்த்தினான் சேகர். " வேண்டாம் மாலா ! ஆறு வருஷமாகியும் இன்னும் தாய்மைப் பேறு தான் அடையலேங்குற வேதனையில இருக்காங்க எங்கண்ணி. எங்கண்ணனுக்கும் வருத்தம் இருக்கத்தான் செய்யறது. அதனால் நீ

சொல்றதக் காட்டிலும் நான் சொல்றதுதான் சரியெனப் படறது என் மனசுக்கு !"

சரி எனப் பட்டது மாலாவுக்கு.

ஜாதகப் பொருத்தம் பார்த்துதான் சேகரின் அண்ணன் கண்ணனுக்கு கவிதாவை கட்டி வைத்தார்கள். இருவருக்கும் குழந்தை பாக்கியம் உண்டு

என அடித்துப் பேசினார்கள். ஆனால் ஆறு வருடமாகியும் இன்னும் அந்த பாக்கியம் கிடைக்காமல் போனது ஏனென்று தெரியவில்லை . கோயில் குளம் என்று சுத்தியாயிற்று. குழந்தை வரம் வேண்டி பல நேர்த்திக் கடன்களும் செலுத்தியாயிற்று. ரிசல்ட் நில் ! மருத்துவ ரீதியாக பரிசோதனை செய்து பார்த்ததில் இருவர் உடலிலும் எந்தக் குறையுமில்லை என்று உறுதியாகத் தெரிந்தது. இந்தச் சமயத்தில்தான் இரண்டாவது மருமகள் மாலா உண்டானாள். இந்த நல்லச் செய்தியை எப்படியாவது தன் அம்மா காதில் போடுவது

என்று முடிவெடுத்தான் சேகர்.

மறுநாள் எழுந்தான் சேகர். மாலா ஏற்கனவே எழுந்து குளித்து முடித்து சமையல றையில் இருப்பது தெரிந்தது. கூடவே அண்ணியும் இருப்பதைக் கண்டான். காலைக்

கடன்களை முடித்துக் கொண்டு காஃபி பருகியவன் தோட்டத்தில் அம்மா துளசிமாட

த்தைச் சுற்றி வருவதைக் கண்டு பின் பக்கம் சென்றான். வணங்கி முடித்துத் திரும்

பினாள் அம்மா கோமளா.

" சேகர், உனக்கொரு விஷயம் தெரியுமா ? பெருமாள் கண்ணத் திறந்துட்டார். ஆமா, உன் அண்ணன் அப்பாவாகப் போறான். உன் அண்ணி நேத்து ராத்ரிதான் சொன்னா. இதெல்லாம் உன்

பெண்டாட்டி மாலாவோட ராசி தான்.. அது மட்டுமா ? மாலா இந்த வீட்டுல காலடி எடுத்து வெச்ச வேளை உங்கப்பாவுக்கு நிறைய சம்பளத்தோட பெரிய ஆஃபிஸர் போஸ்ட் கிடைச்சுது. சின்ன மருமகள் கொண்டு வந்த அதிர்ஷ்டம்டா! "

நீண்ட நாள் கழித்து அப்பா ஸ்தானத்தை தன் அண்ணண் அடையப் போவதை நினைத்து மகிழ்ச்சியுற்றான் சேகர். அது தன் மனைவியின் ராசியால் நிகழ்ந்தது

என்பதை தன் தாய் வாயால் கூறக் கேட்டு பெருமையாகவும் இருந்தது. அதோடு,

அண்ணி கருத்தரித்து விட்டார் என்ற செய்தி தைரியத்தை வரவழைத்தது சேகருக்கு.

அதனால் இனி தன் மனைவிக்கு நாள் போயிருக்கிறது எனகிற சேதியை தைரிய

மாகக் கூறலாம் என்கிற எண்ணமும் வந்தது.

" அம்மா..வந்து.." தயங்கிய சேகர், " உன் ரெண்டாவது மருமகளுக்கும் நாள் தள்ளிப்

போயிருக்கு..." வெட்கத்துடன் தலை கவிழ்த்தான்.

" அடி சக்கை ! கூடிய சீக்கிரமே மழலைகள் சப்தம் இந்த வீட்டுல ஒலிக்கப் போறது

ன்னு சொல்லு !" என களிப்புடன் கூறியவாறு வீட்டினுள் நுழைந்தாள் கோமளா,

சேகர் பின் தொடர.

வி.கே.லக்ஷ்மிநாராயணன்
சென்னை

# தினம் ஒரு சமையல்



## சக்கரை வள்ளி கிழங்கு பான் கேக்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சர்க்கரை வள்ளி கிழங்கு | -200 கிராம் |
| ரவை | -1/2 கப் |
| சர்க்கரை | -1/4 கப், |
| பால் | -1/2 கப் |
| உப்பு | -ஒரு சிட்டிகை |

செய்முறை:

முதலில் சர்க்கரை வள்ளி கிழங்கின் தோலை நீக்கிவிட்டு சிறு சிறு துண்டுகளாக நறுக்கி இட்லி வேக வைப்பது போல் நன்றாக குறைந்தது பத்து நிமிடமாவது வேக வைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு இந்த கிழங்கை நன்றாக மசித்துக்கொள்ளுங்கள். அடுத்ததாக இதனுடன் ரவை, சர்க்கரை, காய்ச்சிய பால் மூன்று சேர்த்து இதனுடன் உப்பையும் சேர்த்து நன்றாக கலந்து இருபதிலிருந்து முப்பது நிமிடம் மூடி வைத்துக் கொள்ளுங்கள்.



பிறகு இதை திறக்கும் பொழுது மிகவும் கெட்டியாக இருக்கும் பட்சத்தில் இரண்டு அல்லது மூன்று டேபிள் ஸ்பூன் அளவிற்கு தண்ணீர் ஊற்றி கலந்து கொள்ளலாம். இப்பொழுது கெட்டியான மாவு பதம் கிடைத்திருக்கும். அடுப்பில் ஒரு தோசை கல்லை வைத்துக் கொள்ளுங்கள். சிறிதளவு நெய்யை ஊற்றி நெய் உருகியதும் அதில் ஒரு கரண்டி மாவை எடுத்து ஊற்றி தோசையாக ஊற்றாமல் சற்று கனமாக பான் கேக் போல் ஊற்றிக் கொள்ள வேண்டும். ஒருமுறை நன்றாக வெந்ததும் அதை திருப்பிப் போட்டு மறுபடியும் அதற்கு லேசாக நெய்யை ஊற்றி வேக வைத்து எடுத்தால் மிகவும் சுவையான சர்க்கரைவள்ளி பான் கேக் தயாராக இருக்கும்.

இதை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எந்த வித தயக்கமும் இன்றி உண்ணலாம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தேவைப்படக்கூடிய நோய் எதிர்ப்பு சக்தி சர்க்கரைவள்ளி கிழங்கில் அதிக அளவில் இருக்கிறது. இதோடு மட்டுமல்லாமல் விட்டமின் சி, விட்டமின் பி5, விட்டமின் பி6 போன்ற உயிர் சத்துக்களும் இதில் அதிக அளவில் இருப்பதால் அனைவரும் கண்டிப்பான முறையில் தங்களுடைய உணவின் சேர்த்துக் கொள்ள வேண்டிய ஒரு கிழங்காகவே இந்த கிழங்கு திகழ்ந்தது.

# வாழ்க்கை தத்துவம்



அன்பானவர்களிடம் உன் மனதை மறைத்து விடாதே. உன் மனதில் உள்ளதை மறைப்பதாயின் அன்பாய் இருப்பது போல் நடித்து வாழாதே.

கற்பனையில் சித்திரத்தை வரைந்து விடலாம், ஆனால் ஒருவனின் மனதை புரிந்து கொள்ளாமல் நண்பன் ஆகி விட முடியாது.

ஒரு மனிதனின் அதீத அன்பானது தாயிடம் மட்டுமே உள்ளது..

ஒன்றை நாம் பார்க்கும் விதத்தில் அது சரி தப்பு என்று முடிவு எடுத்து விடுகிறோம். அதை நாம் எப்போது சரியா தவறா என்று ஆராய்ந்து பார்ப்பதில்லை அப்படி நாம் ஆராய்ந்து பார்த்து விட்டால் சந்தேகங்கள் மனிதர் இடையே தோன்றாது.

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*டீச்சர்: இந்த பீரியடு முழுக்க வெளியே நில்லு, அப்பதான் உனக்கு அறிவு வரும்*

*ஸ்டூடண்ட்: அப்பொ நீங்க பாடம் எடுத்தா, அறிவு வராதா டீச்சர்?*



*டீச்சர்: ஏன் டா நோட்டுல பால் கணக்கு, மளிகை கணக்கு எல்லாம் எழுதி வச்சிருக்க?*

*ஸ்டூடண்ட்: நீங்க தான சார் வீட்டு கணக்கு எழுதிட்டு வரச் சொன்னீங்க!*

# சீமை அகத்தி நன்மைகள்



சீமை அகத்தியின் முக்கிய பயன்கள் தோல் நோய்களான சொறி, சிரங்கு, தேமல் போன்றவற்றை குணப்படுத்துவது, பூஞ்சை தொற்றுகளை நீக்குவது, இரத்த அழுத்தத்தைச் சீரமைப்பது, மற்றும் சுவாசக்கோளாறுகள், சிறுநீரகப் பிரச்சனைகள், பெண்களின் இரத்த சோகை, மற்றும் பால்வினை நோய்கள் போன்றவற்றுக்கு சிகிச்சை அளிப்பது ஆகும். இதன் இலைகள், மலர்கள், காய்கள் மற்றும் மரப்பட்டைகள் சித்த மற்றும் ஆயுர்வேத மருந்துகளில் பயன்படுத்தப்படுகின்றன.

முக்கிய பயன்கள்:

தோல் நோய்கள்: சொறி, சிரங்கு, தேமல், மற்றும் நீர் வடியும் தோல் வியாதிகள் போன்றவற்றை குணப்படுத்த உதவுகிறது. இதற்காக இலைகளை அரைத்து பூசலாம்.

பூஞ்சை தொற்றுகள்: படர்தாமரை உள்ளிட்ட பூஞ்சை தொற்றுகளை சரிசெய்ய களிம்பு வடிவில் பயன்படுத்தப்படுகிறது.

உடலின் உள்நலப் பிரச்சனைகள்:

இரத்த அழுத்தத்தைச் சீராக்குகிறது.

சுவாசக்கோளாறுகளுக்கு உதவுகிறது.

சிறுநீரகப் பிரச்சனைகளுக்கு சிகிச்சை அளிக்கிறது.

பெண்களின் இரத்த சோகை மற்றும் மாதவிடாய் தொடர்பான பிரச்சனைகளைக் சரிசெய்ய உதவுகிறது.

பால்வினை நோய்களையும் சரிசெய்யும் தன்மை கொண்டது.

ஊட்டச்சத்து: இதன் இலைகள் ஊட்டச்சத்து நிறைந்த கீரையாகவும் கருதப்படுகிறது.

பயன்பாட்டு முறை:

மேற்பூச்சு: தோல் நோய்களுக்கு இலைகளை அரைத்து பசையாகப் பூசலாம் அல்லது களிம்பாகப் பயன்படுத்தலாம்.

உட்புறப் பயன்பாடு: சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில், இதன் இலைகள், மலர்கள், காய்கள் மற்றும் மரப்பட்டைகள் பல்வேறு மருந்து தயாரிப்புகளில் பயன்படுத்தப்படுகின்றன.

# 52 வயது நடிகை மலைக்கா.. 19 வயது குறைவான நபருடன் காதலா? வைரலாகும் வீடியோ



ஹிந்தி நடிகை மலைக்கா அரோரா கடந்த சில வருடங்களாக நடிகர் அர்ஜுன் கபூர் உடன் காதலில் இருந்த நிலையில், அவர்களுக்கு இடையில் இருக்கும் வயது வித்தியாசம் பற்றி அதிகம் விமர்சிக்கப்பட்டது.

அதன்பின் அவர்கள் பிரேக்அப் செய்து பிரிந்துவிட்டனர். இந்நிலையில் மலைக்கா தற்போது புதிதாக ஒருவருடன் டேட்டிங்கில் இருப்பதாக செய்தி பரவி வருகிறது.

ஹர்ஷ் மேத்தா என்ற நபர் உடன் அவர் ஒன்றாக வெளியில் செல்லும் போட்டோக்களும் வைரல் ஆகி வருகிறது.

அவர்கள் ஒன்றாக ஒரு கான்சர்ட்டில் கலந்துகொண்ட நிலையில் தற்போது இருவரும் ஒன்றாக ஏர்போர்ட் வந்திருக்கின்றனர்.

இருவரும் ஒரே காரில் ஏறி சென்று வீடியோ வைரலான நிலையில், அவர் தான் மலைக்காவின் புது காதலரா என கிசுகிசு பரவி வருகிறது.






அஞ்சு குரியன் அவ்வப்போது இன்ஸ்டா தளத்தில் போட்டோவை வெளியிடுவதை வழக்கமாக வைத்துள்ளார்.

தற்போது இவர் ட்ரெண்டி லுக்கில் இருக்கும் ஸ்டில்ஸ். இதோ,

# இயக்குநரை நம்பி நடித்தேன் ஆனால் ரொமான்டிக் காட்சிகள்.. ஆண்ட்ரியாவின் அதிர்ச்சி பேட்டி!

பின்னணி பாடாகி, நடிகை என திரையுலகில் கலக்கி கொண்டிருப்பவர் ஆண்ட்ரியா.

கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களை மட்டுமே தேர்தெடுத்து நடிக்கும் இவர் நடிப்பில் வெளிவந்த ஆயிரத்தில் ஒருவர், அவள், வடசென்னை போன்ற படங்கள் இன்றும் ரசிகர்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது.



இவர் நடிப்பில் விரைவில் 'பிசாசு-2' படம் வெளியாக உள்ளது. இது 'பிசாசு' படத்தின் தொடர்ச்சி என்பதால், இதன் மீது பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. இந்தப் படம் குறித்த சுவாரஸ்யமான தகவல்கள் சமூக வலைதளங்களில் தொடர்ந்து வைரலாகி வருகின்றன.

இந்நிலையில், ஆண்ட்ரியா 'பிசாசு-2' படம் குறித்து பேசிய விஷயங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

அதில், " பிசாசு-2' கதையில் துணிச்சலான காட்சிகள் இருப்பதாக இயக்குநர் மிஷ்கின் என்னிடம் கூறினார். ஆனால் படப்பிடிப்பின் போது அவற்றை நீக்கிவிட்டார். இப்படத்தில் ரொமான்டிக் காட்சிகள் அதிகம்.

மிஷ்கின் சார் மீதான நம்பிக்கையில் இந்தப் படத்தில் நடித்தேன். அவர் பல ஸ்டார் ஹீரோக்களுடன் படங்கள் செய்துள்ளார். விரைவில் ஒரு தயாரிப்பாளராக படத்தை வெளியிடுவேன்" என்று தெரிவித்துள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com